(1)

87

(124)

****

" கை முறை அட்டவணை-1." (2)

அகஸ்தியர் சூத்திரம் பதிஜை பதார்த்த குணம்

திரு. எம். அங்கமுத்து வைத்தியர்,

ராசிபுரம்,

சேலம்.

****

124

Sir,

Palm leaf returned to Individual on 28.6.63.

L-

124

தேதி:- 10.6.63.
ஓலைச் சுவடியின் பெயர்:- "கை முறை அட்டவணை" கட்டு-1.
உரிமையாளரின் பெயர்:- ம. அங்கமுத்து ~~பண்டிதர்~~ வைத்தியர்
இடம்:- திருமகள் வைத்தியசாலை. நாமக்கல் ரோடு, சேலம்.

கை முறை அட்டவணை.

அகத்தியர் சூத்திரம் பதினெட்டு பார்த்த முறம்.

சுகபேதி மாத்திரை:-

நேர்வாளம், இலப்பைப்பு, கருகுரோகணி முன்றும் சமனிடை கல்வத்திட்டு குமரிச் சார் சாமம் .4 அரைத்து ஸ்ரீ வலங்காய் பிரமாணம் உருட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு சுக்கு கசாயம் விளக்கெண்ணெ அநுபானம்.

ரச செந்தூரம்:-

ரச கெந்தகத்துடன் சூதம்*அக் பனிர இந்த இரண்டு சரக்குக்கு பாதி அல்லது எடைக்கிடை அல்லது கால் அரைத் திட்டமாவது சேர்த்து வெண் கருவிட்டு அரைத்து வில்லை தட்டி ரவியில் வைத்து காடை புடத்தில் செந்தூரம் அல்லது பற்பம் ஆகும்.

நாயுருவி பற்பம்:-

விளைந்த நாயுருவியை பிடுங்கிக் காயப் போட்டு அந்தக் குச்சியை கீழே பரப்பி அது மேல் உவர் மண் போட்டு அதில் சரக்கை கட்டியாக வைத்து மேலும் உவர் மண் பரப்பி வைத்து மேல் நாயுருவி குச்சி போட்டு தீக் கொளுத்தி எரித்து ஆற வைக்க பற்பம்.

கரப்பான் எண்ணெய்:-

பூவரசு செங்கத்தாரி பூத கரப்பான் பட்டை, கண்டங்கத்திரி நிலவாகை வகைக்கு பலம்.ய இடித்துக் கொண்டு நாழி சலம் விட்டு ஒன்றுக்கி ஆமணக்கு எண்ணெய் படி.க, வெள்ளாட்டின் பால் படி.க, மிளகு கருஞ்சீரகம் கார்கோக வெண்குன்றி வசம்பு, சதகுப்பை, வலம்புரிக்காய், பறங்கிப் பட்டை. கஞ்சி.க, முலைப் பால அரைத்துக் கொண்டு எண்ணெயில் கரைத்து மெழுகு பதத்தில் காய்ச்சி காச்சி நிறை கொ த்தால் கரப்பான் எல்லாம் தீரும். அரிப் பெல்லாம் போம். ரணத்தின் மேல் தடவவும் உதிர்ந்து போகும் பத்தியம் புகை, கசப்பு, தள்ளவும்.

கரிசாலை லேகியம்:-

பொற்கலையான் சாறு படி.உ, நெருஞ்சி சாறு படி.உ, சிறுகீரை சாறு படி.க பொடுதலைச் சாறு படி.க, கீழ்காய் நெல்லிச் சாறு படி.க, சி செருப்படிச் சாறு படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, நெல்லிக்காய் சாறு படி.க, கசாயம் வைக் திநவல் பட்டை, கருங்காலி பட்டை, அத்திப் பட்டை, தென்னம் பூ வகைக்கு பலம்.ரு இடித்துப் போட்டுத் நாழி நீர் அஷ்ட பாகமாக காய்ச்சி சாறுகளில் சேர்த்து மிளகு நெல்லி முள்ளி, அவரி சித்தாமுட்டி பெருமுட்டிலாமிச்சி வகைக்கு பலம்.ரு இடித்து இரு நாழி நீரில் சோடச பாகமாக காய்ச்சி மேற்படி கசாயத்தில் சேர்த்து பனைவெல்லம் பலம்.உ, கள்ளல் வெல்லம் பலம்.உ, ஆவின் பால் படி.4 இதில் கரைத் து விட்டு அடுப்பில் பாகு சேறில் சீரகம்.எஃ, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி ஏமம், குரசாணி ஓமம், நாகப்பூ, கற்கடக சிங்கி கோஷ்டம், அக்கிரகாரம், அதி மதுரம், தாளிச பத்திரி, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி வகைக்கு பலம்.க, சூரணித்து முன் பாகில் தூவி கிண்டி ஆவின் நெய். படி.க, தேன் படி.உ, சிருலோக செந்தூரம் பலம்.க, ட போட்டு கிண்டி மெழுகு பதம் பார்த்து புன்னைக் காயளவு இரண்டு வேளையும் மண்டலம் தீரும் வியாதி வெண் பாண்டு வகையெல்லாம், பித்த வெட்டை, கை கால் ஓய்வு காந்தல், கை கால் எரிவு,

வாந்தி, மயக்கம், அசக்கம், வீக்கம், நீர்ச் சிறுப்பு கிருமி வகையெல்லாம் அரோசிகங்கள் அகல செந்தி தயிலமுங்கே.

<u>கண்டாந்திரி லேகியம் :-</u>

இஞ்சி சாறு படி.க, கண்டங்கத்திரி சாறு படி.க, நெருஞ்சிச் சாறு படி.க, முள்ளங்கிச் சாறு .க, பழச் சாறு படி.க, ஆவின் பால் படி.க, பனைவெல்லம் பலம்.உ, கரைத்த பாகு சேறில் திரிகடுகு, சீரகம், ஏலம், வாய் விளங்கம், கிரும்பு, தாளிச பத்திரி வகைக்கு பலம்.க, சூரணித்த ஆவின் நெய் படி.½, தேன் படி.வ மெழுகு பதத்தில் வாங்கி பாக்களவு இரு நேரம் கொள்ளவும். மண்டலம். தீரும் வியாதி வாய்வு, பித்த வாந்தி, சூலை, இசிவு முதல் அரோசிகங்கள், அன்னதி வேஉசும் குன்மம் எட்டு, பொருமல் கால் பித்தத்தின் எரிவதெல்லாம் கருப்பு வலி, சாந்த மாகும். பித்தத்தின் கோபம் வாய்வு எல்லாம் போகும். குமரிப்பூ தயிலம் முழுக திரமான பித்த நோய் தீரும் பாரே.

<u>பஞ்ச தீபாக்கினி லேகியம் :-</u>

திரிகடுகு, ஏலம், சீரகம் வகைக்கு பலம்.க இள வறப்பாய் சூரணித்து ஆவின் பால் படி.உ, பனைவெல்லம் பலம்.உ கரைத்த பாகு சேறில் சூரணத்தை தூவிக் கிண்டி நெய் உழக்கு தேன் அரை உழக்கு கிண்டி மெழுகு பதம் வாங்கி பாக்களவு இரு நேரம் கொள்ளவும் தீரும் வியாதி மண்டலத்தில். வாய்வு உஷ்ணங்கள், பித்த வாய்வு, உளைவு, பித்தக் கருப்பு, வலி எரிச்சல் பேதி, பொருமல், வாய்வென்ற கிருமி தீரும். அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, வாந்தி யெல்லாம் அரக்குத் தயிலம் முழுக சகல சுரமுந் தீரும்.

<u>கண்டங்கத்திரி லேகியம் :-</u>

கண்டங்கத்திரி சமூலமும் பலம்.ய இடித்து தண்ணி சிலத்தில் அஷ்டபாகமாக காய்ச்சி பனைவெல்லம் பலம்.ய, பாகு சேறில் திப்பிலி கோஷ்டம், தாளிச பத்திரி அக்கிரகாரம் வகைக்கு பலம்.க, சூரணித்த பாகில் தூவி ஆவின் நெய் கால் படி, தேன் படி.1/8, மெழுகு பதம் பாக்களவு இரு நேரமும் மண்டலம். தீரும் வியாதி கழல் வாதம், பாரிச சூலை, கிருமி, புருகளெல்லாம், கெர்ப்ப வாய்வு, உஷ்ண நோய், பித்தமெல்லாம் தீரும்.

<u>சிந்தாதி லேகியம் :-</u>

ஆமாதக் காடி படி.ய, புளித்த மோர் படி.ய, புளியிலை ஒரு தூக்கு இடித்துப் போட்டு சுரப்பிடித்த இரும்பு ஒரு தூக்கு கொதிக்க வைத்து அஷ்ட பாகமாக காய்ச்சி எடுத்து கொண்டு கையான் சாறு படி.க, இஞ்சி சாறு படி.க, சிறு கீரைச் சாறு படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, நெருஞ்சிச் சாறு படி.க, சிறு செருப்படைச் சாறு படிக, தென்னம் பூச் சாறு படி.க, கீழ்கா நெல்லிச் சாறு படி.க, ஆவின் பால் படி. , பனைவெல்லம் பலம்.ய, கரைத்து விட்டு பாகாக் காய்ச்சி கடைச் சரக்கு சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, கோஷ்டம், மாஞ்சில் சீரகம், வால்மிளகு, கிரும்பு, தாளிச பத்திரி, லவுங்கப் பத்திரி, ஆனை திப்பிலி வகைக்கு பலம்.க இள வறுத்து சூரணித்த முன்பாகில் தூவிக் கிண்டி ஆவின் நெய் படி.க, தேன் படி.க, (களிம்மாக) லேகியம் இரு களஞ்சி இரு நேரம் மண்டலத்தில் தீரும் வியாதி பாண்டு வகை யெல்லாந் தீரும். பஞ்சு போல் தேகங் கருக்கும். பித்த வெட்டை வாய்வு, மயக்கம், அக்கினி மந்தம் வெண் பாண்டு, தேகமெல்லாம் கருக்கும். மகோதரம், ப்லிகை வாய்வு, சோகை கிருமி, மூலம் உடம்பெரிவு இளைப்பு எப்பம், பொருமல், உப்பிசம், இரைச்சல் பத்தியம் கஸ்காத்தத் தீரும்.

<u>மகா வில்வாதி லேகியம் :-</u> வில்வ வேர் பலம்.ரு. ஏலாமி சவாகை பாதிரியும்

நன்னாரி பொரிவிளாவும், சித்தாமல்லி, பேராமல்லி, சிறுவிளா வேர், சிறுவாகை முன்னை மொசுமொசுக்கை இருவேலி தேத்தா வகைக்கு பலம் இடித்து இரு நாளி ஜலத்தில் அஷ்டபாகமாக காய்ச்சி எடுத்துக் கொண்டு கொமட்டிப் பழச் சாறு, இஞ்சி சாறு வகைக்கு படி.க, சிறுசெருப்படிச் சாறு படி.½, சர்க்கரை சேர்.ரு, ஆவின் பால் படி.உ, கரைத்து எல்லாம் பாகு சேறின் சுக்கு திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, லவங்கப் பத்திரி, ஏலம், கோஷ்டம், அதிமதுரம், நச்சீரகம், பெருஞ்சீரகம், வாயுவிளங்கம், மாஞ்சில், சிறுநாகப்பூ, நாங்கு பருத்தி வித்து, நிம்ப வித்து இலைப்பைப் பு வகைக்கு பலம்.க, சூரணித்துப் பாகில் தூவி தேன் படி.½, ஆவின் நெய் படி.½, மெழுகு பதமாய்க் கிண்டி வைத்துக் கொண்டு புன்னைக் காயளவு இரு நேரமு மண்டலம் கொள்ளவும். தீரும் வியாதி சுவாசம், அரோசிகங்கள், விக்கல், சத்தி எரிவு, பாண்டு காசம், வயிற்று எரிச்சல், கனமான உப்பிசங்கள், கிராணி தீரும். கா கை கால எரிவு, காந்தல், வெள்ளோக்காளம், அன்னமி வெடூழ் துலே, குன்மம் எட்டும், சுரம்

பித்தம்.40, அஸ்தி சுரம் மருந்தீடெல்லாம் அதிசாரம் உள்பிரமேகம் அடிவான லோகம் வைத்துக் கொள்ளவும்.

<u>சதுரங்க வில்வாதி லேகியம்:-</u>

வில்வ வேர் முக்கா வேளை வேர், சங்கம் வேர் வகைக்கு சிக்கு.க, சித்தாமுட்டி, சித்தாமல்லி, பெருமல்லி, முள்ளி கந்தல், சாறனை வேர், கண்டங்காரிலாமிச்சு சீந்தில் கொடிவேலி, பொன்முசட்டை, நன்னாரி, சிறுதேக்கு முதலான மரு-ம் பலம்.ரு இடித்துவைய ஆத்த நீர் இரு நாளி விட்டு அஷ்ட பாகமா பிரித்துக் கொண்டு கன்னல் வெல்லம் சேர்.4, ஆவின் பால் படி.உ, கரைத்து பாகு செய்து திரிகடுகு, திரிபலாத் திரும்பு, ஏலம், கருஞ்சீரகம், கோஷ்டம், தாளிச பத்திரி, சமம் இரண்டு, அரத்தை இரண்டு, கொத்தமல்லி, லவங்கப் பட்டை, அக்கிர காரம், அதி, திப்பிலி, வால் மிளகு, சாதிக்காய் வகைக்கு பலம்.க, இவ வைத்து சூரணித்து பாகில் தூவிக் கிண்டி தேன் படி.½, குழம்பு போல் வாங்கி வைத்து வேஞ்சி எடை இரு நேரம் மண்டலம் கொள்ளவும். தீரும் வியாதி பித்த வெட்டை, பாண்டு ஆ, ---குன்மம் எட்டு குன்மம் எட்டு விஷி , வாய் கசப்பு, வெள்ளோக்காளம், வாயுறல், அக்கினி மந்தம், துலே கை கால், காந்தல், பித்தம்.40, பத்தியம் புளி கசப்பு. புகை, பெண்ணும் தள்ளவும்.

திரிலோக செந்தூரம், வாலரச செந்தூரம், லோக செந்தூரம் இதுகள் பணவிடைக்கு குறையாமல் வைத்துக் கொள்ள பித்தமெல்லாம் போகும். சிலேட்டுமம் தீரும்.

<u>கூழ்ப் பாண்ட லேகியம்:-</u>

கூழ்ப் பாண்டச் சாறு படி.4, தாளை விழுது சாறு படி.4, தென்னம்பச் சாறு படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, ஆவின் பால் படி.உ, சர்க்கரை பல ய கரைத்து பாகு செய்து நச்சீரகம், கொத்தமல்லி, கோஷ்டம், மிளகு, மாசக்காய் ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், தாளிச பத்திரி வகைக்கு பலம்.க, சூரணித்து பாகில் தூவி தேன் நெய்யும் படி.½ கூழ் போலக் கிண்டி வாங்கி புன்னைக் காய் வித்து (அளவு) இரு நேரமும் மண்டலம் கொண்டால் தீரும் வியாதி காமாலை, சோகை, அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, பிரமியங்கள், வெள்ளை விழுதல், தேக புஷ்டி வீந்து, ஜாம் உஷ்ண நோய், நீர் சிறப்பு. பத்தியம் புகை, புளி தள்ளவும்.

<u>மகா கண்டங்கத்திரி லேகியம்:-</u>

ஆத்தி முள்ளி பலம்.எ, கரிமுள்ளி பலம்.ருய, சித்தாமுட்டி, பேராமுட்டி மிளகரணை, கொடிவேலி, சிறா, நாகமல்லி, சிறுகாஞ்சொறி, முக்கா வேளை, இலாமிச்சு, கோரை, உத்தாமணி காக்கொட்டி வகைக்கு பலம்.க இடித்து இரு நாளி நீரில் அஷ்ட பாகமாய் வாங்கி பாண்டத்தில் எலுமிச்சம் பழச் சாறு படி.½,

கூட விட்டு ஆவின் பால் படி.உ, சர்க்கரை பலம்.யரு கரைத்து பாகு செய்து கடைச் சரக்கு திரிகடுகு, திரிபலாதி, கர்க்கடக சிங்கி, நற்சீரகம், பெருஞ்சீரகம், சித்தரத்தை, அக்கிரகாரம், சன்ன லவங்கப் பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, பேரரத்தை, லவங்க பத்திரி வகைக்கு பலம்.க, இள வறுப்பாய் சூரணித்து பாகில் தூவிக் கிண்டி தேன் படி.க, நெய் படி.ந் விட்டு மெழுகு போல் கிண்டி பீங்கானில் வழித்து வைத்து புன்னைக் காய் அளவு இரு நேரம் மண்டலத்தில் . தீரும் வியாதி. க்ஷயம் எட்டு குன்மம் எட்டு, வாதம் 80, மெய்ப் பிளைப்பு, வெகு நீர் கோர்வை, இசிவு வலிகள், வாதங்கள், கெர்ப்ப வெட்டை, கெர்ப்ப சூலை, பூக்களெல்லாம் தாளகும் லோகம் கட்டிக் கொள்ளவும் தீரும்.

<u>கபாட லேகியம்:-</u>

நாவல் பட்டை, அரசம் பட்டை, அத்திப் பட்டை, கருங்காலிப் பட்டை, ஓதியம் பட்டை வகைக்கு பலம்.ய, இடித்துக் கொண்டு தாழி சிலத்தில் போட்டு அஷ்ட பாகமாக்கி பனைவெல்லம் பலம்.ய, கரைத்துப் பாகு செய்து கஞ்சாவை சுத்தி செய்தது பலம்.க, சுக்கு, சீரகம், மிளகு, ஓமம், குரசாணி ஓமம், சிங்கி, காட்டாத்திப்பூ, சிறுநாகப்பூ, வால்மிளகு, கொத்தமல்லி, ஏலம், கிராம்பு, சாதிக்காய், பத்திரி, மாசக்காய், அதிவிடயம், திப்பிலி வகைக்கு பலம்.க, இளவறுத்து சூரணித்து பாகில் தூவி தேன் நெய்யும் விட்டுக் கிண்டி பீங்கானில் வைத்துக் கொண்டு மண்டலம் பாக்களவு இரு நேரம் கொள்ளவும். தீரும் தீரா நோய்கள் ஆசிகா கிராணி, வாய்வு, கருப்பு முதல் பான்டு கிராணி பதினெட்டு உஷ்ண வாய்வுகள் மூலத்தின் கிராணி யெல்லாம் தீரும்.

<u>திப்பிலி ரசாயனம்:-</u>

திப்பிலி பலம்.ய, மிளகு பலம்.ரு, சுக்கு பலம்.ரு, ஓமம் பலம்.உ, சித்தரத்தை பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, லவங்கம், ஏலம், கொடிவேலி பலம்.க, மிக வைத்துச் சூரணித்து சக்கரை தான் சமனும் கூட்டி தேன் விட்டு பிசைந்து கொண்டு வெருகடி இரு நேரம் கொள்ளவும் தீரும் வியாதி இளைப்பு, ஈளை, காசம் சிலேட்டும நோய், உதரத்தில் வாய்வு எல்லாந் தீரும்.

<u>மேகத்துக்கு அமுனி லேகியம்:-</u>

சீனப்பா அமுக்கிரா வேர் வகைக்கு பலம்.ய, நிலப்பனை வேர் பலம்.ரு தண்ணீர் விட்டான் பலம்.உ, நன்னாரி வேர், சங்க வேர், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, வாய்விளங்கம், கொத்தமல்லி, இரு சீரகம், ஓமம், குரசாணி, ஓமம், சித்தரத்தை, கெந்தம், சிறுதேக்கு, கண்டங்கத்திரி, கொடிவேலி, இலாமிச்சை வேர், கார்கோவ, வால்மிளகு, மூத்திரிகை, பேரீந்து, வெப்பாலை, தாமரை கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, கருவேம்பு, நிலவேம்பு, வகைக்கு பலம்.க இடித்துக் கொண்டு இள வறுப்பாய் சூரணித்து குங்குமப்பூ, கோரோசனை கற்பூரம் வகைக்கு களஞ்சி நிறை நிறுத்து பொடித்துப் போட்டு சர்க்கரை சேர்.4, ஆவின் பால் படி. , கரைத்துப் பாகு கிண்டி ஆவின் நெய் படி.க, தேன் படி.ந், மெழுகு போல் கிண்டி பீங்கானில் வைத்து இரு நேரம் பாக்களவு கொள்ளவும். தீரும் வியாதி, கிரந்தி, சூலை, கண்டமாலை, வாதம், வாயுவெல்லாம், பிரமியங்கள், வங்குப் புற்று, சிலேட்டும நோய் தீரும். பத்தியம் காத்துச் சாப்பிடவும்.

<u>சவுபாக்கிய சுண்டி:-</u>

சுக்கு பலம்.அ, மேல் தோல் சீவிப் போட்டு மொச்சை விரைப் பிரமாணம் நறுக்கி புதுச் சட்டியில் போட்டு செம்முள்ளி, நச்சந்திராய், முருக்கிலை, கரப்பான், சிறுசெருப்படி, காத்தொட்டி, சாறு, கைட்டிக் கால் வித்து, புதுச்

சட்டியில் கொட்டு வெவ்வேறே சிறு ரவியில் உலர்த்தி இடித்து நன்றாய் சூரணித்து வடி கொண்டு வைத்துக் கொண்டு கார்கோக வாலுளுவை விதை கடுகை நீர், சிறிய பவளம் வாய் விளங்கம், தாளிக்காய், நெல்லி முள்ளி, கண்ட திப்பிலி, செவ்வியம் வகைக்கு பலம்.½ இவை எடுத்து சூரணித்துக் கொண்டு அருக்கிற பொன்முசுட்டை, கண்டங்கத்திரி, நன்னாரி நிலப்பனை வகைக்கு பலம்.க, சுத்தி செய்து இடித்து வெள்ளாய் வடி கொண்டு வைத்துக் கொண்டு மேல் வகை சூரணம் ஒன்றாய் சேர்த்து அதற்கு சமனிடை சர்க்கரை வா ங்கி ஆவின் பால் பால் படி.உ-ல் சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு அடுப்பில் வைத்து பாகு செய்து முன் சொல் கொட்டிக் கிண்டி நன்குக கிண்டி புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு வெருகடி பிரமாணம் இரு நேரம் கொள்ளவும். தீரும் வியாதி மூல வகை பிரமியங்கள், குசிகா வாய்வு, காசமொடு, பித்த மெல்லாம் அந்திர வாய்வு, மேக வகை வாதம், அக்கினி மந்தம், வாயுமல், வாய் கசப்பு, வயக்கிரவிவ வியாதி யெல்லாந் தீரும். பத்தியம் புளி, சுரப்பு, புகையோடு பெண்ணுந் தள்ளவும்.

<u>இஞ் அக்கினி சூரணம்</u>:-

கொடிவேலி, சீரகம் கடுகு, ஓமம், சிறுதேக்கு, சுக்குதிப்பிலி, கோஷ்டம், பிறப்பு, வகைக்கு பலம்.க, பெருங்காயம், வசம்பு வகைக்கு பலம்.௨, கடுகுரோகணி பலம்.௩, இவை வகைப்பாய் சூரணித்து சீனி சர்க்கரை சமனாய்க் கட்டி சுக்கு நீர் வெந்நீர் கொள்ளவும். வெண்ணெயிலும் வெருகடி கொள்ளவும் தீரும் வியாதி சோகை சிரசி, வகை உதிர கிராய்வு, சூல வாய்வு வாதமெல்லாந் தீரும்.

<u>திரிரட்சக சூரணம்</u>:-

முந்திரிப் பழம் பேரீச்சம் பழம், நெல்ப் பொரி, முத்தக் காசு, அதிமதுரம், ஞக்காவேளை, ஏலம், கிரும்பு, கொத்தமல்லி, மிளகு, வேலி, திப்பிலி, கடுகை நீர், சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, லவங்கப் பத்திரி வகைக்கு பலம்.க இவை எடுத்து சூரணித்து சர்க்கரையைக் கூட்டி வெருகடி தேனில் கொள்ளத் தீரும் வியாதி அந்திர வாய்வு, பாண்டு ரோகம், தாப சுரம், மயக்கம், தாக்கம், பித்த வகை.10, அரோசியங்கள் அன்னம் வேண்டும் உஷ்ண நோய், சிலேட்டுமங்கள், அக்கினி மந்தம் வாய்வு, கைகெரிவு, காந்தலெல்லாந் தவறுண்டே போமேடா நெய்யில் கொள்ள.

<u>அகல கெந்தாதி சூரணம்</u>:-

சன்ன லவங்கப் பட்டை விராகனிடை.க, சிறுநாகப்பூ விராகனிடை.உ ஏலம் விராகனிடை.4, மிளகு விராகனிடை.அ, திப்பிலி விராகனிடை. சுக்கு விராகனிடை.கஉ, அகல கெந்தி விராகனிடை. அகல கெந்தி சுத்தி செய்து உலர்த்திக் கொண்டு இவை எடுத் சூரணம் செய்து சர்க்கரை சமன் கட்டி ஆவின் பால் அல்லது நெய்யில் வெருகடி தா கொள்ளவும். தீரும் வியாதி மேகவகை யெல்லாம், மேகத்தின் பாண்டு, ஊறலெல்லாம் போகும்.

<u>ரச செந்தூரக் குரு</u>:-

நாகம் விராகனிடை. ரசம் விராகனிடை.., சவ்வீரம் விராகனிடை.4, இந்ப் படிக்கு நிறுத்துக் கொண்டு நாகத்தை உருக்கி மற்றொரு பாத்திரத்தில் ரசத்தை வைத்துக் கொண்டு அதில் கொடுத்து ஒன்றாக உருகிய போது அப்பால் வீரத்தைப் பொடி பண்ணிக் கொண்டு அதில் சிறுகச் சிறுகச் சேர்த்து உரக்கில் கட்டி எடுத்து வைத்துக் கொள்ளுகிறது. இந்தக் குருவில் ரசம் சுத்தி செய்து கல்வத்திலிட்டு குருவில் ய விராகனிடை ரசத்துக்கு இரண்டு விராகனிடை ஒரு கொடுத்து பச்சைத் தண்ணீர் சிறுக விட்டு அரைத்தால் வெண்ணெ போல் சேர்ந்து வரும் உருட்டி எடுத்துக் கொண்டு சட்டியில் உப்பை வைத்து அதில் இந்த ரசக் கட்டியை வைத்து மேல் சட்டி மூடி சுமலாக்கினி நாழிகை.4 எரித்து அப்பால் குதம்பை போட்டு இரண்டு சாமம் எரிக்க செந்தூரம் ஆகும். அப்பால் வியாதிகளுக்கு

அநுபானம் அறிந்து கொடுக்கவும். மேல் முறை ரோகத்தில் கொடுக்கவும். காம பிரத்தில் கொடுக்கவும்.

<u>கண்டாத்திரி சூரணம்</u>:-

இஞ்சி பலம்.௪, மேல் தோலைச் சுரண்டிப் போட்டு சிறுக நறுக்கிப் பழச் சாற்றில்.௧ நாள் ஊறப் போட்டு மறுநாள் ரவியிலுலர்த்தி சீரகம் பலம்.௧, நாள்.௧, பழச் சாற்றில் ஊறப் போட்டு மறு நாள் ரவியில் வைத்த மிளகு தாளிச பத்திரி திப்பிலி, லவங்கம், கிராம்பு, கோஷ்டம், வாய்விளங்கம் வகைக்கு பலம்.௪, வாங்கி இவை எல்லாம் சூரணித்து சர்க்கரை சமன் கூட்டி வெருகடி பிரமாணம் கொள்ளத் தீரும் வியாதி பித்த முதல் வாய்வு போகும். அசேசியங்கள் அன்னத் வேஷம் பித்த வெட்டை பொருமல் விம்மல் வாயுவொடு வாதமெல்லாம் சூலை யெல்லாம் தீரும். பத்தியம் புளி புகை பெண் தவிர்க்கவும்.

<u>தாளிச பத்திரி சூரணம்</u>:-

தாளிச பத்திரி பலம்.௰, திரிகடுகு, திரிபலாதி கோஷ்டம், அக்கிரகாரம், அத்தி, திப்பிலி, சீரகம், கொத்தமல்லி, வாய் விளங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, மாஞ்சில், சோம்பு, வால் மிளகு, லவங்கப்பட்டை, வகைக்கு பலம்.௧, சூரணித்து வடிகொண்டு சர்க்கரை சமன் கூட்டி வெருகடிப் பிரமாணம் இரு நேரம் கொள்ளவும். தீரும் வியாதி சுவாசகாசம், இளைப்பு அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, நீர்த் தாகம், புண்ணும் நெஞ்சில், பித்த வெட்டை, பித்த பாண்டு, கிராணி வகையெல்லாம் அசேசியங்கள் அன்னத் வேஷம் விம்மலொடு விக்கல், கை கால் எரிவு, காந்தல், பத்தியம் புளி, புகை, பெண் தவிர்க்கவும்.

<u>பஞ்ச தீபாக்கினி சூரணம்</u>:-

திரிகடுகு, சீரகம், ஏலம் வகைக்கு பலம்.௧, இவை யாவற்றையும் சூரணித்து வடி கொண்டு சர்க்கரை சமன் சேர்த்து தேன் நெய்யில் வெருகடி பிரமாணம் இரு நேரம் கொள்ள தீரும் வியாதி உஷ்ண நோய், சூலை வாய்வு, பித்த வாய்வு, சிலேட்டும ரோகம், பொருமல், செரியா மந்தம், மயக்கம், கிறுகிறுப்பு, அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, மூலத்தில் வாய்வு, பத்தியம் புளி, உப்பு, புகை, பெண்ணு தவிர்க்கவும். காந்த செந்தூரம் வைத்துக் கொள்ளவும்.

<u>நிலவாகை சூரணம்</u>:-

நிலவாகை சுக்கு, மிளகு, வாய்விளங்கம், ஓமம் வகைக்கு பலம்.௧, இஞ்சி ரவியில் உலரப் போட்டு சூரணம் செய்து சர்க்கரை சமன் கூட்டி இரு நேரம் கொள்ளவும் தீரும் வியாதி வாயுவெல்லாம், பித்தமெல்லாம், கீழ் நோக்கிப் போம். உஷ்ண ரோகமெல்லாம், விக்கல், பொருமல், சிலேட்டும ரோகமெல்லாம் பொருமல் விம்மல் உடம்பெரிவு, சுவாச காசம் நீங்கும். சூல மல பேதங்கள் வயிற்று விம்மல் முன்மெட்டு மகோதரங்கள் வாயுவெல்லாம் கெர்ப்பவலி கெர்ப்பரோகம் புழுக்களெல்லாம் வெள்ளீரல் கொண்டபல் வயிற்றில் உள்ள வியாதி தீரும்.

வீர சுத்தி:- வீரத்தை இளநீரில் கடிகை மூன்று அவித்து எடுக்கச் சுத்தியாம்.

<u>பவள சுத்தி பவள பற்பம்</u>:-

மேனிச் சாறு பழச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து எடுத்து காட்டாத்தி இலையில் அல்லது இலந்தையிலையில் வைத்து கட்டி முட்டி வைத்து புடத்தில் பற்பம் அப்பால் எடுத்துப் பிங்கானில் இட்டு பசுவின் பால் சிறுக விட்டு ரவியில் வைக்க வெளுக்கும். வெள்ளியமாய் நீறு யெடுத்து கல்வத்திலிட்டு பொடி செய்து வியாதிக்கு அநுபானத்தில் அறிந்து கொடுக்கவும்.

<u>கற்பூர சிலாசித்து சுத்தி பற்பம்</u>:-

கற்பூர சிலாசத்து சுத்தி பற்பம்:-

ஓட்டில் கத்தாளஞ் சோறு எடுத்து வைத்து அதில் சிலாசத்து புதைத்து மேலுக்கு சோறு கொண்டு மூடி ஒரு ராத்திரி ஊற வைக்க சுத்தியாம். அப்படியே மேல் மூடி சீலே செய்து முழப்புடத்தில் பற்பம் பனியில் வைக்கவும். வியாதிக்கு அநுபானத்தில் வைத்து சீந்தி யிலே மாம்பட்டை, நல்லெண்ணே பால் இந்த அநுபானத்தில் வைத்துக் கொடுக்கத் தீரும் வியாதி ரெத்த வெட்டை சல வெட்டை, சதையடைப்பு நீர் சிறப்பு சகல வியாதியும் தீரும். பத்தியம் புளி, புகை பெண்ணு தவிர்க்கவும்.

ஸ்ரீநாக பற்பம்:-

கலங் கொம்ப நாலாகப் பிளந்து நருக்கி பசு வெண்ணே தடவி ரவியில் வைத்து சுத்தியாம். அப்பால் சிறு சிறப் ,படியிலே கவசம் கட்டி ஒட்டில் வைத்து சீலே செய்து முழப்புடத்தில் வைத்து அப்பால் ஆவின் பால் விட்டு அரைத்து ஒரு சாமம் மதிபுடம் போடப் பற்பம். கீரை ஆத்திமிலேயில் பற்பம். ஆகும். இந்த ஸ்ரீநாக பற்பம் உஷ்ணம் நோய் தீரும்.

_______பற்பம்:-

ரெல்தாளி வாழைப்பழம் எடுத்து நடுவில் கீறிக் கறிப் பிறண்டையிலே கசக்கி சா பிழிந்து அல்லது மேற்கண்ட இலே கசக்கி அதக்குள் வைத்து மூடி சீலே சுத்தி பழுத்துக்கு மேலே அப்பால் ஒட்டில் சீலே செய்து முழப்புடத்தில் பற்பம்.

அயக்காந்த செந்தூரம்:-

(ஒரு ஒரு பணவிடைக்கு. சரக்கு இரண்டு சுத்தி செய்து சமஅக நிறுத் ய-க்கு ஒரு பணவிடை பூநீரின் சேர்த்து பழச் சாத்திஉல் நாலு சாமம் அரைத்து வில்லே செய்து ஒட்டில் வைத்து சீலே செய்து திட்டமுள்ள எரு.யஉ-ல் புடம்.க அப்பால் பழச் சாத்தில் சாமம் இரண்டு இரைத்து முழுபுடம்.க அப்பால் கரிப்பான் சாறதில் சா மம்.க அரைத்து புடம்.4 போடுகிறதில் மூன் புடம் போட்ட எருவுக்கு.க, எரு.உ, எரு குறைத்துக் குறைத்துப் புடம் போட்டு வரவும். இந்தப் படி செய்தால்.க புடம் (அளாது).க புடம் குறை செந்தூரம் குங்கும நிறத்துக்கு ஆகும். பொடி செய்து வைத்துக் கொண்டு பித்த வாய்வு பொருமல் மயக்கம், கைகால், காந்தல், அசதி கிறுகிறுப்பு, உப்புசம், இரைச்சல், செரியாமந்தம், வயத்துப் போக்கு கிரணி மூல வாய்வு, அன்னத வேஷம், அருசிகங்கள், பாண்டு முதல் தீரும். வாய்வுக்கு பஞ்ச தீபாக்கினி அல்லது மற்ற லேகியம் பாண்டுவுக்கு சிகத்தி யிப்படிக்கு பலம் விராகனிடை வித்து இரு நேரத்துக்கு கொள்ளவும். பத்தியம் புளி, புகை பெண்ணு தவிர்க்கவும்.

கறி உப்பு செந்தூரம்:-

கறி உப்புக்கு பத்திலொன்று பூனீர் சேர்த்து எருக்கலம் பால் விட்டு நாலு நாழிகை அரைத்து வில்லே செய்து ஒட்டில் வைத்து சீலே .யரு எருவில் புடம் அப்பால் மேற்கண்ட ஒட்டிற் புடம்.கஉ வௌறின சிகப்பாக சிந்தூரம் ஆகும். கருப்புட்டி அல்லது வியாதிக்குத் தக்க அநுபானம். தீரும். வியாதி.

வல்லாரை சூரணம்:-

வல்லாரை ஆவின் பாலில் அவித்து உலத்தி காயப் போட்டுச் சூரணித்த பலம்.ய, கிரம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, மாசக்காய், தாளிச பத்திரி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, இள வறுப்பாய் சூரணித்த சரக்கு வகைக்கு பலம்.க இள வறுத்து சூரணித்த இரண்டு வகையும் ஒன்றுகச் சேர்த்து சர்க்கரை சமன் சேர்த்து வெரு கடி னா ள் நெய்யில் இரு நேரங் கொள்ள தீரும் வியாதி மேகவகை, காந்தல், மேகத் தால் பிரமியங்கள், உஷ்ண நோய், நீற நிக்கல், நீரெரிவு, கண்ணெரிவு, கண் புகைச் சல், உடம்பெரிவு, மூலச் சூடு, சுருக்கான நீர்ச் சூடு குறந்த போகும். மது மேகந்

நந்தி மேகம் நாடாத சூயமேகம் நசின மாகும். மேகமெல்லாம் குளிர்ச்சி காணும். கொள்ளு வாய் அப்பிரகம் வைத்துக் கொள்ளவும்.

பூநீறு_மெழுகு_பூநீறு_செந்தூரம்:-

பூ நீறும் நவச்சாரமும் சமனிடை கல்வத்தில் அரைத்து கைபாக நிதான மாகப் பனியில் வைத்து அரைக்கு மெழுகு போல யிருக்கும். செந்தூரிக்க வேணு மானால் வில்லை செய்து ரவியில் வைத்து ஒட்டில் வைத்து சீலை செய்து குக்குட புடத்தில் செந்தூரமாகும். வெளிறின சிகப்பாயிருக்கும். மஞ்சளுக்கு அதிகமாக சிவக்காது எடை விராகனிடை.க-க்கு 5/8 இருக்கும். இதுக்கு தீரும் வியாதி. -----

அகஸ்தியர்_குழம்பு:-

பெருங்காயம், கடுகுரோகணி, அகஸ்தியர் குழம்பு கதா. களஞ்சி.க இந்துப்பு ரசம் பொற்காரம், மஞ்சிட்டி சலை, அரிசி, திப்பிலி, /அரிதாரம், கருஞ்சீரகம், இவ்வளவு மருந்து சரியிடை நேர்வாளமும் இந்த மருந்துகளுக்கு சமனிடை எடுத்து அதில் பாதி சுத்தி செய்து பாதி பச்சையாய் உரைத்து நஞ்சு எடுத்துப் போட்டு சேர்க்கவும். பத்தியம் உப்பு வறுத்துக் கூட்டவும். கறியாகாது. மோராகாது. கரப்பன் பதார்த்தம் ஆகாது. அரவை சாமம் நாலு மோருஞ் சோறும் சாப்பிட்டு அரைத்துக் கூட்டவும். கூட்டிய மருந்தின் பேரே அகஸ்தியர் குழம்பதாகும்.

மீட்டிய சுரமே சுக்கு இருமலே கடுக்காய்ச் சாறு வாட்டிய குளிர் சுரங்கள் வகை சுக்கு மிளகு அளவாம். பாட்டினில் ரெத்த மூலம் நெய்தனில் மேகைப் பாலே.

பாலினில் மொழியாய் பாண்டு மகோதரம் பெருவயறு
மேகமை சூந்தல் மிளகு அள் வெள்வெங்காயம்
சாலவே சன்னிக்கெல்லாம் தேனிஞ்சி சாறதாகும்
ஏன்றமாம் சன்னிக்கு வெருக்கில் வேம்பில் கன்னிலிடே.

இரு கண்ணில் கடுகில் பாதி லிங்கிடில் கத்தாளஞ் சோறு வடி தயிர் சந்தனங்கள் வைத்து நீ கட்ட மாறும் படு பரு பிளவை வாளை பக்க அரையாப்பு புண்கள் விடு பெருஞ் சிலந்தியாவில் உமி நீரில் மிகவும் பூசே. பூசிடு முலைக் குத்துக்கு புண்ணுக்கு மருவே யாகும். குசிகா வாதத்துக்கு ஊலை குட்டங்கள் நொச்சிச் சாத்தில் பாசமாம் வாய்வு வாதம் பல பல குணத்துக் கெல்லாம் நேசமாம் நொச்சிச் சாத்தில் நேச மாய்ச் செய்து பாரே.

பாரே கபால வலி முதலாய் பிசாசு பறக்கும் திரி புகையில்
நேநரே யெடுக்கும் நீர் சிறுப்பு நீர் காணுது அடைப்பு
தாழை விழுதில் தீரா வாத பல விடங்கள் தீரும் தீரும் திருபிரயே.

பிரிக்கும் திரிக்கும் மீதனில் பிரட்டு உருட்டுந் திரியாக்கும்
வலிக்கும் வாத யீளை தொடும் புகை காட்டில் கொடுக்கு கசாயம்
வெள் வெங்காயம் கொடிய கழச்சி நேர் முசுக்கை சிக்கும் அடிக்கும்
சன்னி பதிமூன்றும் அநுபானம் செய் நூல் விதியே.
விதியால் மருந்து யிது வல்லால் வேறே தெட்டு வேண்டாமே
பதியாம் நோய் தன்க் கெல்லாம் பகர்ந்த படியே பிசகாமல்
மதியாய் யிதற்கு குறி யறிந்து அநுபானங்கள் செய்து
துகையாய்ச் சொன்னூர் மாமுனிவர் சொன்னபடி தான் நிச்சயமே.
பத்தியம் உப்பு, வறுத்துக் கூட்டவும். புளி மோர் தள்ளுபடி கரப்பன் பதார்த்த மாகாது.

சஞ்சீவிச்_சூரணம்:-

சீந்தி தண்டு வாங்கி மேல் தோல் எடுத்துப் போட்டு நறுக்கி உலத்தி இடித்து சூரணித்து வடி கட்டின தூள் படி.க, முன்னுரைத்தின சுத்தி செய்து பொடியாக வரி வளின் பால் படி.க. சீனி படி.½ போட்டு எளி உலைக்கிக் காய வைத்த உரலில்

இடித்துக் கொண்டு சாதிக்காய், சாதி பத்திரி, வால் மிளகு, ஏலம், கிராம்பு, கச கசா, தாளிச பத்திரி, மாசக்காய் வகைக்கு விராகனிடை.ய இள வறுத்து சூரணித்துக் கூட்டி இரண்டும் ஒன்றாய்ச் சேர்த்து சீனி விராகனிடை. வெரு கடி பிரமாணம் நெய்யில் இரு நேரம் கொள்ளவும். தீரும் வியாதி மேகநீர்.உ௰, பிரமியங்கள், மேகமெல்லாம் வத்திய தேகம் அஸ்தி சுரம், வெட்டை, மூலத்தின் சூடு பித்த வகையெல்லாம் கண் எரிவு கை கால் காந்தல் நாடாத தேக மேலாகும் குளிர்ச்சியாகும். மேக ஊறலெல்லாம் போம். கபாலத்தில் ரணங்கள் தீரும். வால ரச செந்தூரம், அப்பிரகம் பணமொன்ற வைத்துக் கொள்ளவும். இதுக்கு பத்தியம் ரோகத்துக்குத் தக்கது வயசுக்குத் தக்கது.

ஏலாதி சூரணம்:-

லவங்கம்.க, மிளகு.உ, நாகம்.4, தாளிசம்.அ, கூகைநீர். சுக்கு.௰உ, ஏலம். சமன் சர்க்கரை கலந்து புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் இரு நேரம் கொள்ளவும் தீரும் வியாதி மந்தம், வாதம், வாய்வு, கிறந்தி ரண துரித கிறந்தி, மேக ஊறல், சொறி சிரங்கு, சிலேட்டுமங்கள், குஷ்ட குன்ம நோய் பெரும்பாடு எழும்புருக்கி தீரும்.

அகஸ்தியர்.ய_____:-

1. அரிதான பிருதிவியாகி நிற்கும் ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரி தான் தேயுவாகும் பின்னுமொரு வெள்ளைதான் வாயுவாகும்
வரிதான லிங்கமது ஆகாசமாகும் வருந்திப் பச்சையுடன் மாட்டலாகும்
தெரியாத வயித்தியரே மிந் த லப்பா சித்தரய்யாம் சொன்ன வித்தை செகத்
தில் பாரே.
2. செகத்திலுள்ள வயித்தியரே செப்பக் கேளும் திறமான அரிதாரக் கட்டி வாங்கி
சுகத்திலே சுண்ணாம்புக்குள்ளே வைத்து சுத்தி செய்து தானெடுத்து வைத்துக் கொண்டு
செகத்திலே மனிதருக்கு ஈளை காசம் எலிகடிகள் விஷ பாண்டு பித்த பாண்டு
மகத்தான குளிர் காச்சல் மருந் கொண்ட நாய்களுக்கும் வைய்யே சுக்கில்.
3. சுக்கான சவ்வீரக் கட்டி வாங்கி சுவாசமொடு காசம் நிற்கும் பலவீக்கம்
மிக்கான குன்மமொடு இளைப்பு ஈளை மிகுத்ததொரு நெஞ்சடைப்பு மிளகில் செய்ய
தொக்காகுஞ் சூலையுடன் வயத்தில் கொய்டே தோருத நீருளவை நீர்மைக்கும்
சிக்காதே கொடுவேலி வேரைச் சுட்டு திறமான அரைத்து உருண்டை செய்யப் போ
மே.
4. போமடா கெவுரியுட போக்கைக் கேளு புகழான தோஷமொடு சுரத்துக் கெல்
லாம்
தாமடா சுக்கிருட தண்ணீர் தன்னில் தரியாதே காலிடைநாள் தாக்கப் போகும்
நாமடா சொல்லுகிறோம் கிறந்தி மேகம் நயமாகும் வயத்தில் வலி சூலை யெல்லாப்
ஓமடா கருப்புக் கட்டி தன்னிலிய ஒரு கோடி நோய்களெல்லாம் ஒளியும் பாரே.
5. பாரென்ற வெள்ளைப் பாஷாணந் தன்னில் பாங்காக யெருக்கலம் பால் விட்டு ஆட்ட
சீரென்ற சிறு பயறளவு உருண்டை செய்து தினமான பெரு உள் மாந்தைக்கும்
சாறென்ற வேப்பிலைச் சாற் உள்மாந்தைக்காகும் சனத்திலே பெரு வயறு கொட
ஊட்டி கிறதத்தில் தீரும்
லேமென்ற சோகைக்கும் அப்படியே செய்ய வெகு காலம் நோய்களெல்லாம் பிற
போமே.
6. போகுமே லிங்கமடா சன்னி தோஷம் பொறுக்காத நெஞ்சடைப்பு வாய்வு மூர்ச்சை
தாகவே வயத்தெரிவு வயத்திழா தல் தனி யிஞ்சி சாத்திலிட்டு தாக்கப் போகும்
மேகமே சூலையொடு பித்த பாண்டு விஷ பாகம் வலி குன்மம் சோகைக் கெல்லாம்
பாகமாய்க் கொடிவேலிச் சாத்தில் செய்யப் பறக்குமடா பின்னும் வெகு ரோகந்தா
னே.
7. காந்தம் நாலு கெந்தி சமன் கரிப்பான் சாறு விட்டரைத்து போந்த சட்டி
தனில் தடவிப் போடு மூடி ஒரு சட்டியிலே
பாந்தமாகச் சீலை செய்து பாங்காய்ப் புடத்தைப் போட்டெடுத்து
வாந்தமாக பின்னமொரு வளமாய்ச் சீலை மூன் போல்ச் செய்யே.

8. செய்யு முறையைச் சொல்லுகிறேன் வீராய்ச் செந்தூர பத்தடனே
வைப்புங் கெந்தி சர சமனும் வாகாய்ப் பழச் சாத்தாலரைத்து
உரியும் படி முன் போலே ஒரு சட்டியிலிடு மேல் மூடி
செய்யு மேரு சீலையிட்டுக் கிரமாய்ப் புடத்தைப் போட்டெடுமே.

9. போட்டெடுத்த செந்தூரம் போமே வெள்ளையில் நீரடைப்பு
நீட்ட சோகை பாண்டுவுடன் நீரும்பலுமே வயத்து வலி
மூட்டத் தேனில் திரிகடுகு மூன்றே நாளில் கொடுத்திடவே
வாட்டப்படாதே போடுமே வாகாஞ் சித்தர் செந்தூர மிதே.

10. சாதிலிங்கம் நாலு சமனும் வாங்கி கனி நாலும் ஆதி சீலை அருக்கி
அதிலே யுருட்டி அரிதாரம் குகா மனோசிலை மண்டை குத்து நடந்த பரங்கி
மேகமெல்லாம் வாகாய் காட்ட ஓடி விடும் மகத்தான சித்தர் புகை யிதுவே.

11. ஆவாரங் கரியொரு நாலு அதிமடன் லிங்கம் மூன்று
தேவாரங் குங்கிலியம் இரண்டு சேரடா வீரமொன்று
தாக வரைத்துச் சுங்கான் தன்னிலே வைத்துக் கொள்ள
போவதே சூலைப் புண்கள் பொய்யில்லை சித்தர் சொன்னார்.

12. தலாத்தி கற்பூரம் நாலு அதிமடம் காந்தம் மூன்று கோலப் பாஷாணம் இரண்டு
கொடிய தோர் கெவுரியொன்று சாலவே கொடிவேலி வேர் சவ்வீரம் அரிதாள் கூட்டி
மூலப் படியே மூன்று வில்லை முடிந்து காய வைத்தெடுவே.

13. எடுத்த வில்லை முதலாக யியல்பாம் புளியஞ் சிராய் சுட்டு
வடிப்பமாக உலை மூடி வைத்தே தீயில் அரை தில்லை
பொடித்தே போடு அபானத்தில் பிடிக்க மூலப் பவுத்திரமும்
தொடுத்த புண்கள் புகையோடும் சொன்னார் சித்தர் புகை யிதுவே.

14. தாரமும் ரசமுங் கெந்தி சரியதாய்த்தானே செய்து
பாரமாஞ் சீலை தன்னில் பரவியே திரி யுருட்டி
வீரமாம் விளக்கில் போட்டு வேப்பெண்ணெய் தனில் வார்த்து
கோரமாம் திரி கொளுத்தி கொடும் புகை மூக்கிலேத்தே.

15. யேத்திடில் சன்னி தோஷம் தீரும் யெறும்பிடில் குஷ்டந் தீரும்
பார்த்திடில் பரங்கி தீரும் பார்வை குளியமுந் தீரும்
கோத்திடில் கண்ட மாலை குன்மங்கள் முதலாய்த் தீரும்
யேத்திடு வியாதிக் கெல்லாம் யேழு நாள் பத்தியமாகும்
போத்திடில் தீரு மென்று பொருப்பு மேலிருந்து சொன்னார்.

அகஸ்தியர். முற்றிற்று.

*****

பிரமமுனி_சுருக்கம்.____முறை :-

16. தானென்ற வீரமொன்று சாதிலிங்க மொன்று
தேனென்ற ரசக் கலப்புச் சேர்ப்பது யிடை தானென்று
ஊனென்ற முலைப் பாலால் ஒரு ஒரு சாமமாட்டி
வேனென்ற ரவி தனிலே காய வைத்து நாளொன்று நாள் மூன்று நன்றுயாட்டி
ரவியிலே மூன்று நாள் ரவியில் வையியே.

17. வையப்பா சிமிள் தனிலே அடைத்துக் கொண்டு வாகான பணவிடைதான் பலை
வெல்லத்திலருந்தும் போது சகல நோயெல்லாம் போகும் கோனென்ற கிரந்தி
குட்டம் குன்மங்கள் க்ஷயகாசம் போம்.

18. போமே யெலிகடி புத்து பொல்லாத சூலை வாதம்
நாமெனும் கண்டமாலை நாசிப் புண் தொண்டைப் புண்ணும்
யோமெனும் அரையாப்போடு யென்னிய பவுத்திரங்களின்
சலமெனும் சலத்தில் வெட்டை கை கால் பிடிப்புப் போமே.

19. போமப்பா நீருமல் கெண்டை பீலிங்க மகோதரங்கள் நடுக்கிய சுரங்கள் சன்னி
நாவினில் வறட்சி தோஷம் யிருக்கிலே விஷங்கள் சோகை யெந்தெந்த நோயுந்
தீரும் தடிப்பு நோயெல்லாந் தீரும் சசிவர்ணத்தின் போக்குத் தானே.

20. தானென்ற பத்தியந்கான் சொல்லக் கேளு தானே தான் கூட்டு வர்க்கம் பசுவின் பால் மோர் நெய்
மானேதான் மிளகு சீரகம் வெந்தயம் மல்லி தேனும் சர்க்கரையும் சீனி சேர்ந்த முந்திரிகை கற்கண்டு
ஊனுள கருவேப்பிலை கருவாப்பட்டை உத்தமொரு முளகாய் சேரே.

21. முளகாயும் முதிய பாசிப் பயறு மாகும் வழுவான துவரை நா றவ்லை மிஞ்சி நெல்லிக் காயாம்.

22. தளமான நார்த்தங்காய் தரு சிறுகீரையோடு கிளை
உளமான பொன்னாங்காணி உயர்ந்த தோர் முருங்கைப் பிஞ்சான
அவரை உப்பான பேதையே கூட்டுப்பாம் அஞ்சான சுறு திருக்கை வளமுயல்
வெள்ளாடாமே.

23. அஞ்சான கோழி தேளி அயிரை உடும்பு உள்ளாவும்
குஞ்சான ஊர்க் குருவி கூட்டலாமே கூட்டலாம் யேரண்ட யெண்ணை
மிளிய பாசிப் பயறுமாகும் மாட்டலாம் உசிலந் தாளம் மரு வெள்ளிருகுஞ் சீபக் காயாகும்
குறுவை நெல்லு சம்பா நெல்லுமாகும் வாய்ப் புனலுல் துளசி கருவப்பட்டை
வெதுப்பிக் கொப்பளிக்கத் தீரும்.

<u>வீர செந்தூரத்துக்கு சசிவர்ண சூரணத்துக்கு அனுபானம்:-</u>

பசுவின் நெய் படி.க, செங்கொட்டை.ள, செங்கொட்டையை சாணத்தில் கூடப் போட்டு அவித்துச சுத்தி செய்த கொட்டையை மொகுளி யெடுத்து வெட்டிப் போட்டு நஞ்சு இறங்கு அளவில் நெய்யில் போட்டுக் காச்சிக் கொட்டையை யெடுத்துக் போட்டுப் பறங்கிப் பட்டைத் தூள் பத்து பலம் மேற்கண்ட நெய்யில் போட்டுக் கிண்டி இறக்கி ஒரு பீங்கானில் பதனம் பண்ணிக் கொள்ளுகிறது. அதில் செந்தூரம் விராகனிடை.ய, சேர்த்துக் கொண்டு புன்னைக் காயளவு சாப்பிடவும் அந்தி சந்தி. தீரும் வியாதி மேகம், உஷ்ண, ஊறல், தடிப்பு, வெள்ளை ஊறல், புண் கிரந்தி, அரையாப்பு, மேகப் பிடிப்பு, கால் கடுப்பு, கை கடுப்பு மேல் வலி, மேகத்தால் எடுத்த வியாதி யெல்லாந் தீரும். அவ பத்தியம். புளி, பழையது, கரப்பன் பண்டம் தள்ளுபடி.

பாக்கு பலம்.க, கொடிவேலி வேர் பொடி பலம்.ச, கருப்புக் கட்டி பலம்.க ஒன்றாகச் சேர்த்து பிசைந்து கொண்டு புன்னைக் காயளவு எடுத்து வேளைக்கு அரைகால் விராகனிடை செந்தூரம் வைத்துச் சாப்பிடக் குன்மம் வயத்து வலி, வாய்வுக் குத்து, வயத்துப் பொருமல், வாய்வுத் திரட்டிச வாய்வாலெடுத்த வியாதியெல்லாந் தீரும்.

<u>சசி வர்ணம்:-</u>

கருஞ்சீரகம், கடுக்காய், கடுகுரோகணி, மிளகு, சுக்கு, இந்துப்பு, சவுக்காரம், நவச்சாரம் வெங்காயம் அவ்வளவும் பொடி பண்ணி விளக்கெண்ணை விட்டு லேகியம் போல் திரட்டிக கொண்டு செந்தூரம் கால் விராகனிடை வைத்துச் சாப்பிட தீரும் வியாதி சோகை, காமாலை பாண்டு, சொறி பீலிகை நீர், மகோதரம், பெருவயறு, குலை வயத்தில் கட்டி விஷ நீர் மேல் எடுத்த வியாதி யெல்லாந் தீரும். சன்னிக்கு கால் விராகனிடை தேனில் குழப்பிக் கொடுக்கவும். சுரத்துக்கு சர்க்கரையில் கொடுக்கவும். மாவிலிங்கப் பட்டை சூரணம் பண்ணி செந்தூரம் வைத்து கால் விராகனிடை சாப்பிட வாதக கடுப்பு, பக்க வாதம் தீரும்.

இஞ்சி, ஏலம், கிராம்பு, மிளகு, கடுக்காய், தாளிச பத்திரி எல்லாம் சமனிடை இள வறுத்த சூரணம் பண்ணி பசுவின் நெய் விட்டு குழைத்து செந்தூரம் வைத்து சாப்பிடத் தீரும் வியாதி காசம், சுவாசம், இருமல், இளைப்பு, மந்தார காசம், சிலேத்துமத்தால் எடுத்த வியாதியெல்லாந் தீரும். இச்சா பத்தியம்.

களிச்சிப் பருப்பு கொடி வேலி வேர் இரண்டும் சூரணம் பண்ணி ...

தில் சாப்பிட அண்ட வாதம் தீரும். ஜாம் கண்டு செந்தூரம் வைத்துச் சாப்பிடவும். அசாத்திய மூலமாக அநுபானம்.   14.6.63.

(வேறு) வெல்லத்தில் சூர்ணம் விராகனிடை.சு வைத்து மூன்று வேளை சாப்பிடக் குணமறிந்து முதல் சொல்லிய அநுபானத்தில் பத்து வேளை கொடுக்கவும். அசாத்தியம் உடைபட்டு போகும். பத்தியமில்லாமல் எல்லாம் கட்டிக் கொண்டு அவ பத்தியம் மட்டும் தள்ளியும் மத்த எல்லாம் கட்ட வேணுமானால் மேற்கண்ட செந்தூரம் செய்யும் கைகை முலைப் பாலில் இரண்டு சாமம் மட்டும் அரைத்து அப்பால் ரவியில் உலத்திக் கொண்டு சீசாவில் வைத்துக் கொண்டு கொடுக்கவும். பத்திய மிதில் இச்சா பத்திய மட்டுந் தள்ளுபடி. எவ்வித மெல்லிய தேகத்துக்கும் கொடுக்கலாம்.

<u>ஜூ வாகடத்தில் இருந்த முறை:- உள் மூலம், பிறமூலம், ரத்த மூலம்:-</u>

<u>இந்த மூன்று வகை மூலத்துக்கும் லேகியம்:- சிந்தாமணி பண்ண வகை:-</u>

கறிக் கருணைக் கிழங்கு காட்டுக் கருணைக் கிழங்கு, மறள் கிழங்கு அப்பளபக் கிழங்கு, வனமூலிகை வேர், கோவைக் கிழங்கு; நிலப் பனைக் கிழங்கு, வெருகங் கிழங்கு மனிப் பயத்தன்டை கிழங்கு இந்த எட்டு வகையும் வகைக்கு இரண்டு எலுமிச்சங்காயளவு அரைத்து பசுவின் பால் வார்த்து அரைத்து இதில் தென்னம் பாலைப் பூ இடித்த சாறு படி.½ கூட்டவும். இதுக்கு கடைச் சரக்கு மிளகு பலம்.க, நச்சீரகம் விராகனிடை.ய, யேலம் விராகனிடை.ரு, இலவங்கப் பத்திரி விராகனிடை .ரு, லவங்கப் பட்டை பலம்.க, அதிமதுரம் விராகனிடை.ரு, கோஷ்டம் விராகனிடை.ரு, திப்பிலி விராகனிடை.ரு, சாதிக்காய்.உ, சாதிபத்திரி விராகனிடை.க, சிறும்பு விராகனிடை.உ, வால் மிளகு விராகனிடை.ரு இந்தப் பனிரெண்டு வகையும் அரைத்து சட்டியில் கூட போட்டு லேகியமாகக் கிண்டி வைத்துக் கொண்டு நேரத்துக்கு ஒரு கொட்டப் பாக்களவு இரண்டு காலமுங் கொள்ளவும். பதினாறு நாள் கொள்ளவும். தீரும் வியாதி உள்மூலம், பித்த மூலம், இரத்த மூலம், கிறுணி இது வெல்லாந் தீரும். இச்* பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>சீ மூலத்துக்கு மாதளம் பழ லேகியம் பண்ண வகை:-</u>

மாதளந் தோடு அரைத்து ஆவார வேர்ப் பட்டை ஆவரம் நெத்தரிசி பேய்ப் டீச் சொத்தியிலே, இலந்தைக் கொழுந்து இந்த வகையும் வகைக்கு எலுமிச்சங் காயளவு அரைத்து வைத்துக் கொண்டு தென்னம் பாலைப் பூச் சாறு படி.½ விட்டு இதுக்கு கடைச் சரக்கு மிளகு விராகனிடை.ரு, நச்சீரகம் விராகனிடை.ரு, அதிமதுரம் விராகனிடை.ரு, கோஷ்டம் விராகனிடை.ரு, சாதிக்காய் விராகனிடை.உ, சாதிபத்திரி விராகனிடை.க, சிறும்பு விரகனிடை.உ, வால்மிளகு விராகனிடை.ரு, காசுக் கட்டி விராகனிடை.ங, களிப் பாக்கு விராகனிடை.ங, ஏலம் விராகனிடை.ங, இலவங்கப் பட்டை விராகனிடை.க, விளாம் பிசின் விராகனிடை.ங இந்தப் பதிமூன்று வகையும் பொடி செய்து போட்டு விராகனிடை.ஙய, சர்க்கரை கூடப் போட்டு கால்படி பசுவின்நெய்யுங் கூட விட்டு லேசியமாக வைத்துக் கொண்டு ஒரு கொட்டைப் பாக்களவு இரண்டு காலமும் எட்டு நாள் கொள்ளவும். பத்தியம் கார்ப்பு, புளி, தள்ளவும்.

<u>நீர் பீனிசம், சலப் பீனிசம், ரத்தப் பீனிசம் மூன்று வகைப் பீனிசத்துக்கும் தயிலம்:-</u>

நல்லெண்ணை படி.1½, கொறட்டைப் பழச் சாறு, வெத்திலைச் சாறு, ஆதன்டை யிலைச் சாறு, நொச்சியிலைச் சாறு, காத் தொட்டியிலைச் சாறு, கையாந்தகரைச் சாறு, சங்கன் குப்பி யிலைச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, நார்த்தம் பழச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு இந்தச் சாறுகள் வகைக்கு ஆழாக்கு கூட்டி இதுக்கு கடைச் சரக்கு மிளகு விராகனிடை.உய, வாய் விளங்கம் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, அதிமதுரம் விராகனிடை.ரு, கோஷ்டம் விராகனிடை.ரு, செண்பகப் பூ விராகனிடை.ரு, ஏலம் விராகனிடை [illegible]

பத்திரி விராகனிடை.ரு, இலவங்கப் பட்டை பலம்.க, வால் மிளகு பலம்.க, அக்கிரகாரம் விராகனிடை.ரு, இலாமிச்சம் வேர் பலம்.க, கோரோசினை விராகனிடை.ஊ இந்தப் பதி நாலு வகையும் இடித்துக் கடப் போட்டு எண்ணையை அடித்துக் கொண்டு மூன்று நாளைக் கொ திரம் முருக மூன்று வகைப் பீனிசமுந் தீரும். பத்தியம் , காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>பீனிசத்துக்கு புகை:--</u>

பெருங் குறட்டை பழத்தைக் கொண்டு வந்து கண் திறந்து வைத்துக் கொண்டு மெல் லிய சீலை எடுத்து ஆழாக்கு வெற்றிலைச் சாறு கொட்டைப் பாக்களவு மிளகு அரைத்து அந்தச் சாத்தில் கரைத்து சீலையில் நனைத்து பிழிந்து கொண்டு குறட்டைப் பழத்துக்குள்ளே அந்தச் சீலையைச் செலுத்திவிட்டு நாள் ஊற வைத்து எடுத்து பயத்தங்காய் போல் திரித்து நிழலுலத்தி வைத்துக் கொண்டு வேப்பெண்ணெ வார்த்து விளக்கேற்றி அந்தப் புகையை மூக்கில் வாங்க இந்தப் படிக்கு இரண்டு காலமும் ஆறு நாள் பிடிக்க மூன்று வகைப் பீனிசமுந் தீரும் பத்தியம் காரப்பு, புளிப்பு தள்ளவும்.

முற்றும்.

சு.ச.24.6.63.